سُوْرَةُ الْاَعْلٰى مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

سَبِّحِ اسْمَ رَبِّكَ الْاَعْلَى ۙ۱ الَّذِىْ خَلَقَ فَسَوّٰى ۙ۲ وَالَّذِىْ قَدَّرَ
فَهَدٰى ۙ۳ وَالَّذِىْۤ اَخْرَجَ الْمَرْعٰى ۙ۴ فَجَعَلَهٗ غُثَآءً اَحْوٰى ؕ۵
سَنُقْرِئُكَ فَلَا تَنْسٰۤى ۙ۶ اِلَّا مَا شَآءَ اللّٰهُ ؕ اِنَّهٗ يَعْلَمُ الْجَهْرَ وَمَا
يَخْفٰى ؕ۷ وَنُيَسِّرُكَ لِلْيُسْرٰى ۚ ۖ۸ فَذَكِّرْ اِنْ نَّفَعَتِ الذِّكْرٰى ؕ۹ سَيَذَّكَّرُ
مَنْ يَّخْشٰى ۙ۱۰ وَيَتَجَنَّبُهَا الْاَشْقَى ۙ۱۱ الَّذِىْ يَصْلَى النَّارَ الْكُبْرٰى ۚ۱۲
ثُمَّ لَا يَمُوْتُ فِيْهَا وَلَا يَحْيٰى ؕ۱۳ قَدْ اَفْلَحَ مَنْ تَزَكّٰى ۙ۱۴ وَذَكَرَ اسْمَ
رَبِّهٖ فَصَلّٰى ؕ۱۵ بَلْ تُؤْثِرُوْنَ الْحَيٰوةَ الدُّنْيَا ۙ۱۶ وَالْاٰخِرَةُ خَيْرٌ وَّ
اَبْقٰى ؕ۱۷ اِنَّ هٰذَا لَفِى الصُّحُفِ الْاُوْلٰى ۙ۱۸ صُحُفِ اِبْرٰهِيْمَ وَمُوْسٰى ۱۹ ع ۱۹ ۱۲

سُوْرَةُ الْغَاشِيَةِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتٌّ وَّعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

هَلْ اَتٰىكَ حَدِيْثُ الْغَاشِيَةِ ؕ۱ وُجُوْهٌ يَّوْمَئِذٍ خَاشِعَةٌ ۙ۲ عَامِلَةٌ
نَّاصِبَةٌ ۙ۳ تَصْلٰى نَارًا حَامِيَةً ۙ۴ تُسْقٰى مِنْ عَيْنٍ اٰنِيَةٍ ؕ۵ لَيْسَ
لَهُمْ طَعَامٌ اِلَّا مِنْ ضَرِيْعٍ ۙ۶ لَّا يُسْمِنُ وَلَا يُغْنِىْ مِنْ جُوْعٍ ؕ۷

அத்தியாயம் : 87

## அல் அஃலா _ மிக்க மேலானவன்

வசனங்கள் : 19 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 (நபியே!) மிக உயர்வானவனாகிய உமதிரட்சகனின் பெயரை நீர் (புகழ்ந்து) துதிசெய்வீராக!

2. அவன் எத்தகையவனென்றால், அவனே (படைப்பினங்களனைத்தையும்) படைத்து, பிறகு (அவற்றைச்) செவ்வையாக்கினான்.

3. இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவனே (அவற்றுக்கு வேண்டிய அனைத்தையும்) நிர்ணயம் செய்து, பிறகு (அவற்றை அடைய) நேர்வழி காட்டினான்.

4. இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவனே (கால்நடைகளுக்கு) மேய்ச்சலுக்குரியவற்றை வெளியாக்கினான்.

5. பின்னர், அவைகளை உலர்ந்த கருத்த கூளங்களாக ஆக்கினான்.

6. (நபியே! நம் வசனங்களை) நாம் உம்மை ஓதிடச்செய்வோம்; பிறகு நீர் மறக்கமாட்டீர்_

7. அல்லாஹ் நாடியதைத்தவிர; நிச்சயமாக அவன் வெளிப்படையானதையும், மறைந்திருப்பதையும் நன்கறிவான்.

8. மேலும், (ஈருலக நன்மைகளைச்செய்ய) இலகுவானதன் பால் உமக்கு நாம் எளிதாக்குவோம்.

9. ஆகவே, நல்லுபதேசம் (ஜனங்களுக்குப்) பயனளிக்குமாயின் நீர் (உபதேசித்து) நினைவுபடுத்துவீராக!

10. (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகின்றவர் (இதனைக் கொண்டு) உபதேசத்தைப் பெறுவார்_

11. மிகுந்த துர்பாக்கியமுடையவனோ, இதிலிருந்து விலகிக் கொள்வான்.

12. அவன் எத்தகையவனென்றால், (நரகத்தின்) பெரும் நெருப்பில் அவன் நுழைவான்.

13. பின்னர், அதில் அவன் மரணிக்கவுமாட்டான்; வாழவு மாட்டான்.

14. பரிசுத்தமடைந்தவர் நிச்சயமாக வெற்றி பெற்றுவிட்டார்.

15. மேலும், அவர் தன் இரட்சகனின் பெயரைக் கூறி, பிறகு தொழுதார்.

16. எனினும், நீங்களோ இவ்வுலக வாழ்க்கையைத் தெரிவுசெய்து கொள்கின்றீர்கள்.

17. மறுமை(யின் வாழ்க்கை)தான் மிகச்சிறந்ததும், மிக்க நிலையானதுமாகும்.

18. நிச்சயமாக இது முன்னுள்ள ஆகமங்களில் இருக்கிறது. (அதுவே)

19. இப்றாஹீம், மூஸாவுடைய ஆகமங்களிலும் (இருக்கிறது).

அத்தியாயம் : 88

## அல் காஷியா _ சூழ்ந்து கொள்ளக்கூடியது

வசனங்கள் : 26 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 (நபியே!) சூழ்ந்து கொள்ளக்கூடியதின் (மறுமை நாளின்) செய்தி உமக்கு வந்ததா?

2. அந்நாளில் (பல) முகங்கள் (இழிவினால் வாடி) பணிவுடையனவாயிருக்கும்.

3. அவை (தவறானவற்றை நல்லவை என நினைத்து) செயல்பட்டவையும், (அதற்காக) உறுதியாக நின்றவையுமாகும்.

4. கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் அவை பிரவேசிக்கும்.

5. கொதிக்கும் ஊற்றிலிருந்து (அவர்களுக்கு நீர்) புகட்டப்படும்.

6. (அதில்) அவர்களுக்கு (கசப்பான) முட்செடியிலிருந்தே தவிர, (வேறொன்றும்) உணவுமில்லை.

7. அது கொழுக்கவும் வைக்காது; அவர்களுடைய பசியையும் தீர்க்காது.